# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association
(பதிவு எண்: 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண்.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005

28441286 / 28440938 / 28443601 e-mail: tngeastatecenter@gmail.com / web: www.tngea.org



| மாநிலத் தலைவர் | | பொதுச் செயலாளர் |
|---|---|---|
| **மு.அன்பரசு** | | **ஆ.செல்வம்** |
| மாநில துணைத் தலைவர்கள் | மாநிலப் பொருளாளர் | மாநிலச் செயலாளர்கள் |
| **மொ.ஞானத்தம்பி** | **மு.பாஸ்கரன்** | **சா.டானியல் ஜெயசிங்** |
| **ஆ.பெரியசாமி** | துணை பொதுச்செயலாளர்கள் | **உ.சுமதி** |
| **கோ.பழனியம்மாள்** | **இரா.மங்களபாண்டியன்** | **ச.ஹேமலதா** |
| **சி.எஸ்.கிறிஸ்டோபர்** | **என்.வெங்கடேசன்** | **ஆ.அம்சராஜ்** |
| **சி.பரமேஸ்வரி** | **மு.சீனிவாசன்** | **சா.கோதண்டபாணி** |
| **மு.செல்வராணி** | **தெ.வாசுகி** | **அ.குபேரன்** |


கடித எண்.35-3/2022 நாள்.21.07.2022

பெறுநர்

**மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்**
தலைமைச் செயலகம்
சென்னை-600009

மதிப்பிற்குரிய ஐயா

வணக்கம்.

பொருள் : அரசு ஊழியர்-ஆசிரியர்கள் கோரிக்கைகள் - நிறைவேற்றிட வலியுறுத்தி 23.08.2022ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கோட்டையில் சந்தித்து கோரிக்கை மனு வழங்குதல் - மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு உகந்த நேரத்தை ஒதுக்கிட கோருதல் - தொடர்பாக

அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காமல் இருந்த கடந்த கால ஆட்சியாளர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட பல கட்ட போராட்டங்களுக்கு அடிப்படையாக இருக்கும் எங்கள் அறம் சார்ந்த கோரிக்கைகளுக்கு ஆதரவாக இருந்ததோடு மட்டுமல்லாமல் 2021 டிசம்பர் 18,19 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தின் 14வது மாநில மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு அரசு ஊழியர்-ஆசிரியர்களின் கோரிக்கைகள் அனைத்தும் தங்களது தலைமையிலான அரசு நிறைவேற்றித் தரும் என்ற நம்பிக்கையை அளித்தார்.

மாநாட்டில் அறிவித்த பிறகு அம்மாதத்திலேயே 14 சதவீத நிலுவை அகவிலைப் படியை வழங்கி அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களின் ஒரு கோரிக்கையை நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் செயலை வரவேற்கிறோம்.

அரசு ஊழியர்கள் இல்லை என்றால் அரசாங்கம் இல்லை என்றும் நான் திரும்பி பார்க்கும் நிலையில் இல்லாமல் அரசு ஊழியர்களுடனேயே இருப்பேன் என்றும் உரிமையுடன் உணர்ச்சிப் பூர்வமாக மாநாட்டில் உரை நிகழ்த்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நிலைபாட்டிற்கு மாறாக நிதி சாராத கோரிக்கைகள் உட்பட அனைத்தும் நிர்வாகத்தினால் தீர்க்கப்படாமல் இன்று வரை நிலுவையில் உள்ளது என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு வர விழைகின்றோம்.

எனவே, கடந்த 07.05.2022 அன்று சேலத்தில் நடைபெற்ற மாநில செயற்குழு முடிவின் அடிப்படையில் தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற கோரியும், மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் 2022 ஆகஸ்ட் - 23ம் தேதி கோட்டை நோக்கி பேரணியாக சென்று மாண்புமிகு தமிழக முதல்வரிடம் கோரிக்கை மனு அளிப்பது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் பிரதான கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டம் உள்ளிட்ட வாழ்வாதார கோரிக்கைகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் டிசம்பர் மாநாட்டு உரை பெரும் நம்பிக்கையை அளித்தது. தேர்தல் அறிக்கையின் 80 சதவீதம் வாக்குறுதிகளை நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மீதமுள்ள அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் சார்ந்த கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கையில் ஒட்டுமொத்த அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களும் இருக்கிறார்கள்.

எனவே

1. புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் வழங்க வேண்டும்.,
2. சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், MRB செவிலியர்கள் உள்ளிட்ட தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் மூன்றரை லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.
3. மத்திய அரசு ஊழியர்களுக்கு 01.01.2022 முதல் 3% அகவிலைப்படி அறிவித்துள்ளது. அதுபோல் மாநில அரசு ஊழியர்களுக்கும் தமிழக அரசு உடனடியாக வழங்க வேண்டும்.
4. கொரோனாவை காரணம் காட்டி 2 ஆண்டுகள் முடக்கப்பட்ட சரண் விடுப்பு ஒப்புவிப்பு மேலும் காலம் குறிப்பிடாமல் தடை செய்ததை உடன் திரும்ப பெற வேண்டும்.,
5. சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்கக் காலத்தை பணிவரன்முறை செய்திட வேண்டும்.,
6. தமிழக அரசுத் துறைகளில் காலியாக உள்ள 4 லட்சத்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் நிரப்பிட வேண்டும்.,
7. 21 மாத ஊதிய மாற்ற நிலுவையை வழங்கிட வேண்டும்.,
8. WIPRO வசம் உள்ள IFHRMS திட்டத்தில் உள்ள குளறுபடிகள் மற்றும் குறைகளை சரி செய்து தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டும்.,
9. புதிய மருத்துவக் காப்பீடு திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும். 2 ஆண்டுகளாக விடுவிக்கப்படாத கொரோனா சிகிச்சைக்கான தொகையை உடனே விடுவிக்க வேண்டும்.,
10. கொரோனா காலத்தில் இறந்த அரசு ஊழியர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு நிபந்தனையின்றி கருணை அடிப்படை பணி நியமனம் வழங்கிட வேண்டும்.,

உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக 23.08.2022 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கோட்டையில் சந்தித்து கோரிக்கை மனு வழங்குவது என முடிவெடுத்துள்ளோம் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்களை சந்திக்க உகந்த நேரத்தை ஒதுக்கித் தருமாறு தங்களை கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் அன்புடன்

**(மு. அன்பரசு)**
மாநிலத் தலைவர்
செல்.9840187508

**(ஆ. செல்வம்)**
பொதுச் செயலாளர்
செல்.9443930500